

## சிறப்பு வரைபடம் 1.5
## உள்நாட்டுக் கொடுகடன் மீள்சமநிலைப்படுத்தல்: அரச எதிர் தனியார் துறை இயக்கவாற்றல்கள்

### உள்நாட்டுக் கொடுகடன் விரிவாக்கம் (தனியார் எதிர் அரசு)




### மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தனியார் மற்றும் அரச துறைக்கான கொடுகடன்




குறிப்பு: 1. உள்நாட்டுக் கொடுகடன் என்பது வங்கித்தொழில் துறையால் தனியார் மற்றும் அரச துறைகளுக்கு வழங்கப்படும் மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்களை குறிக்கின்றது. அரச துறைக்கான கொடுகடனானது அரச பிணையங்களில் முதலீடுகள் உள்ளடங்கலான அரசாங்கத்திற்கு விரிவாக்கப்பட்டுள்ள கொடுகடன், மற்றும் அரசிற்கு சொந்தமான வியாபார தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்படும் கொடுகடன்களையும் உள்ளடக்கியதாகும்.
2. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான தனியார்துறை கொடுகடன் விகிதமானது மொத்த வெளிநின்ற கொடுகடனுக்கும் அக்காலாண்டுடன் தொடர்புடைய ஆண்டிற்கான பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையிலான விகிதமாகக் கணிப்பிடப்படுகின்றது.

*மூலங்கள்:* இலங்கை மத்திய வங்கி
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

பொருளாதார நெருக்கடிக்கு முன்னரான ஆண்டுகளில், இறைத் துறையில் நிலவிய தொடர்ச்சியான கட்டமைப்புச் சமமின்மைகள் காரணமாக அரசாங்கம் அதன் அதிகரித்த நிதித் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு, மத்திய வங்கியிடமிருந்தான கடன்பாடுகள் உள்ளடங்கலாக, உள்நாட்டு வங்கித்தொழில் துறையிடமிருந்து நிதியுதவியை அதிகளவில் சார்ந்திருக்க வேண்டியிருந்தது. இதன் விளைவாக, நாணயக் கொள்கை நிலைப்பாட்டில் மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும், வங்கித்தொழில் முறைமையின் மூலம் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் தாக்கத்துக்குட்பட்டது. நாட்டிற்கான அரச கொடுகடன் தரமிடல் குறைக்கப்பட்டமை மற்றும் படுகடன் நெருக்கடி போன்றன அரசாங்கத்தின் வெளிநாட்டு நிதியுதவிக்கான அணுகலை கட்டுப்படுத்தியமையினால், நெருக்கடி காலப்பகுதியில் இவ் அழுத்தங்கள் தீவிரமடைந்து, உள்நாட்டு மூலங்களில் முழுமையாகச் சார்ந்திருக்க வேண்டிய கட்டாயத்திற்குட்பட்டது. எனினும், பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, நாணய நிதியிடலுக்கு தடைவிதிப்பது உள்ளடங்கலாக இலங்கை மத்திய வங்கியின் நிறுவனசார் சுயாதீனத்தை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு இறைத் திரட்சி முயற்சிகள் மற்றும் சட்டவாக்கச் சீர்திருத்தங்கள், நெருக்கடிக்குப் பிந்திய பொருளாதாரத்தில் சாதகமான பெறுபேறுகளை விளைவித்துள்ளன.

அரச துறைக் கொடுகடனில் ஏற்பட்ட மிதமான போக்கானது தனியார் துறைக் கடன்பாடுகளுக்கு இடமளித்து, தனியார் துறை கொடுகடனின் அதிகரிப்பிற்கு வழிவகுத்துள்ளது. இதற்கமைய, பொருளாதார நடவடிக்கையின் மீட்சி மற்றும் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாடொன்றின் கீழ் கடன்பெறுகைகளுக்கான குறைந்த செலவு போன்றவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, நெருக்கடியின் போது சரிவடைந்திருந்த மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான தனியார் துறைக் கொடுகடன் 2025 இறுதியில் 31.2 சதவீதத்திற்கு படிப்படியாக மீட்சியடைந்தது. எனினும், மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான தனியார் துறைக் கொடுகடன் விகிதம் நெருக்கடிக்கு முன்னரான மட்டங்களுக்கு கீழே காணப்படுகின்றது. அதேவேளை, இக்காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான அரச துறைக் கொடுகடன் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது.